திருத்தொண்டர் புராணம்

மூலமும் சூசனமும்

சைவசித்தாந்த நிலையம்
குவலாலம்பூர்
மலேஷியா

UG4183
R007B05

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

பெரியபுராணம்

என்று வழங்குகிற

திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் நாயனார்

அருளிச்செய்தது.

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

காரைக்காலம்மையார் ஈறாகவுள்ள புராணங்கட்குத்
தவத்திரு ஆறுமுகநாவலரவர்கள் எழுதிய சூசனத்தோடு
எஞ்சிய புராணங்கட்கு யாழ்ப்பாணம் ஏழாலை
பண்டிதர் மு. கந்தையா பி.ஏ. அவர்களால்
எழுதப்பெற்ற சூசனமும் சேர்த்து,

மலேஷிய திருக்கயிலாய குருபரம்பரை,

சைவசித்தாந்த நிலையத்தினரால்

சென்னை, *காந்தளகத்தில்* அச்சிடப்பெற்று
வெளியிடப்பெறும்

ஒன்பதாம் பதிப்பு

ஸ்ரீமுக கார்த்திகை மக நாள்

தி.பி. 2024

கி.பி. 1993

உரிமை : சைவசித்தாந்த நிலையம், கோலாலம்பூர், மலேஷியா.

தலைவர் : பொறியியலாளர் க.குமாரசிவம்
உபதலைவர் : சைவபூஷணம் இ.வே. கந்தையா
டாக்டர் சி. பரராஜசிங்கம்
டாக்டர் ஆ. இரத்தினசபாபதி
செயலாளர் : திரு. அ. ஆறுமுகம்
பொருளாளர் : திரு. ஐ.குலவீரசிங்கம்

Centre for Saiva Sidthantham,
No. 16, Lorong Kasah Dalam,
Medan Damansura,
50490 Kulalumpur,
Malaysia.

Chairman : Ir. K. Kumarasivam B.E.M.Eng., Sep. Eng., F.I.E.M., M.I.E. (AUST), M.I.E.S., M.A.C.E.M.,

Vice Chairman : *Saiva Sidthantha Kalanithi, Saiva Pooshanam* R.V. Kandiah

Trustees : Dr. S. Pararajasingham M.B.B.S. (S'pore)
D.A. Retnasabapathy G.Vsc., M.Vsc (Toronto) Dip. Bact. (Toronto)
A. Arumugam P.A.(M) ACCA
A. Kulaveerasingham, Senior Medical Laboratory Technologist.

விலை: மலேஷியா வெள்ளி 40/-
இலங்கை ரூபாய் 450/-
இந்தியா ரூபாய் 400/-

பதிப்பு ஆலோசனை: சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன், தஞ்சாவூர்; வி.என்.சிவராசா இ.ஆ.ப. (ஓய்வு), கொழும்பு; கா. தயாபரன் இ.ஆ.ப., கொழும்பு; திருமதி தங்கரெத்தினம் முத்துக்குமாரசுவாமி, இலண்டன்; நா. சந்திர சேகரன், சென்னை; புலவர் வெற்றியழகன், சென்னை;
பொதுத் தொடர்பு உதவி: க. பேரின்பநாதன், இரத்மலானை; சி. தயாளதேவன், கொழும்பு; செ.ரா. ஷோபனா, அ. ஜெயராஜசிங்கம், *காந்தளகம்* சென்னை;
ஒளி அச்சுக்கோப்பு: க. இரவி, ம. இராஜப்பா, மூவை ந. சுந்தரராஜன், வா.சாந்தி, பா. செல்வ ராசன், *காந்தளகம்,* சென்னை.
ஓவியம்: ரா. சிவக்கொழுந்து; **பக்கமாக்கல்:** ஜெ. பூவரசு, சந்திரகாசன், *காந்தளகம்,* சென்னை.
எதிர்மறை: சக்தி வண்ண ஆய்வகம், சிந்தாதிரிப்பேட்டை.
அச்சு: ஜேசிபி டாட்ஸ், நுங்கம்பாக்கம்.
கட்டாளர்: பாலாஜி கட்டாளரகம், இராயப்பேட்டை.
தொழில்நுட்ப ஆலோசனை: ச. கயல்விழி, *காந்தளகம்*, சென்னை.
ஒருங்கிணைப்பு, தயாரிப்பு: க. சச்சிதானந்தன், மறவன்புலவு, சாவகச்சேரி.

ஒளிஅச்சுக்கோப்பு, அச்சிடல்: ***காந்தளகம்,***
4, முதல்மாடி, ரகிசா கட்டடம்,
834, அண்ணாசாலை, சென்னை: 600 002.
தொலைபேசி: 834505



அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசர், சிதம்பரம்

நாவலர் பெருமான் திருப்பெயர் தாங்கி வெளிவந்த பெரிய புராணப் பதிப்புக்களின் வரலாறு

பெரிய புராணத்தை நாவலர் பெருமான் உரைநடையில் எழுதி 1852-ஆம் ஆண்டு வெளியிட்டனர். இந்நூல், இதுவரையில் 22 பதிப்புக்கள் பெற்றுள்ளது என்று தெரிகிறது. சுவாமிநாத பண்டிதர் அவர்களும் நாவலர் பெருமான் உரைநடை நூலை வெளியிட்டார். அவரது வெளியீடும், பல தவறுகளோடு தஞ்சை சரசுவதி மகால் வெளியிட்ட நாவலர் பெருமானின் பெரிய புராண உடைநடை நூலும், இங்கு கணக்கில் கொள்ளப்படவில்லை.

நாவலர் பெருமான் பெரிய புராணம் முழுவதையும் செம்மையுறப் பதிப்பித்தல் வேண்டும் என்று எண்ணினார். மேலும், நாயன்மார் சரிதைகளை மரபு வழியில் விளங்கிக் கொள்ளுதற்குச் சூசனம் ஒன்று இயற்றவும் எண்ணம் கொண்டார். அவர் வரையத் தொடங்கிய சூசனம் காரைக்கால் அம்மையார் புராணத்தோடு நின்றுவிட்டது. மூலம் முழுவதையும் செப்பம்செய்து வைத்திருந்த நாவலர் பெருமான், அதைத் தாம் வாழ்ந்த காலத்தில் அச்சிற் பதிக்கவில்லை. காரணம் யாதெனின், நூல் முழுவதற்கும் அவர் சூசனம் வரையாமையே, நாவலர் பெருமானும் 1879இல் சிவபெருமான் திருவடி நீழலை அணைந்தனர்.

இந்நிலையில், நாவலர் பெருமான் செப்பம் செய்து வைத்திருந்த மூலத்தையும், அவரால் வரையப்பட்ட சூசனத்தையும் எங்ஙனமேனும் வெளியிடுதல் தங்கள் கடமை என்று கருதிய அவருடைய சீடர்கள் இதுவகையில் பெருமுயற்சியை மேற்கொண்டனர். 1884-ஆம் ஆண்டு நாவலர் பெருமான் அமைத்து வைத்திருந்த பெரிய புராணத்தின் முதற்காண்டம் சதாசிவப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. அந்நூலின் முகப்பு இப்படி அமைந்துள்ளது. (பின் பக்கம் பார்க்க)

பிறகு அதே ஆண்டில் பெரியபுராணம் முழுவதும் வெளிவந்தது. இப் பதிப்பின் முகப்புப் பக்கமும் முதற்காண்டப் பதிப்பின் முகப்புப் பக்கமும் ஒன்றுபோல உள்ளன. விலையிலும் மாற்றமில்லை. முதற்காண்டப் பதிப்பில், ''முதற்காண்டம்'' என்ற குறிப்பும் இல்லை.

அடுத்து, ஹேவிளம்பி-மாசி மாதத்தில் (1898-பிப்ரவரி-மார்ச்சு) சதாசிவப் பிள்ளை அவர்களே இரண்டாம் பதிப்பையும் வெளியிட்டனர்.

மூன்றாம் பதிப்பையும் சதாசிவப் பிள்ளை அவர்களே விசுவாவசு புரட்டாதி மாதத்தில் (1905-செப்டம்பர்-அக்டோபர்) வெளிக் கொணர்ந்தனர். எம்மிடம் உள்ள இப்புத்தகத்தில் விலை பதிவான பகுதி அழிக்கப் பட்டிருக்கிறது. இது இப்புத்தகத்தை விற்ற வியாபாரியின் கைங்கர்யம் ஆகும்.

முதல் மூன்று பதிப்புக்களை வழங்கியவர் சதாசிவப் பிள்ளை அவர்களே.

அடுத்து, சாதாரண-கார்த்திகையில் (1910-நவம்பர்-டிஸம்பர்) இந்நூலின் நான்காம் பதிப்பைத் தந்தவர் பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் ஆவர். இப்பதிப்பின் விலை ரூபா 3.

பொன்னம்பலபிள்ளை அவர்களே ஐந்தாம் பதிப்பின் வெளியீட்டாளர் ஆவர். இப்பதிப்பு நள-கார்த்திகையில் (1916-நவம்பர்-டிஸம்பர்) வெளிவந்தது. விலை தெரியவில்லை.

நான்கு, ஐந்து பதிப்புக்களைத் தந்தவர் பொன்னம்பலம் பிள்ளை அவர்கள்.

ஆறாம் பதிப்பை வெளியிட்டவர் விசுவநாத பிள்ளை ஆவர். இப்பதிப்பு துந்துபி - பங்குனியில் (1923-மார்ச்சு-ஏப்ரல்) வெளிவந்தது. விலை தெரியவில்லை.

ஏழாம் பதிப்பு, சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தரும பரிபாலகரான தியாகராஜ பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்டது. விபவ-பங்குனியில் (1928-மார்ச்சு-ஏப்ரல்) இது வெளிவந்தது. விலை விபரம் தெரியவில்லை.

எட்டாம்பதிப்பு, சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் முதலியார் ஜி. சுப்பிமணியம் அவர்களால் 1951இல் வெளியிடப்பட்டது. இதன் விலை ரூ.5/-

இரண்டாம் பதிப்பிற்கும் மூன்றாம் பதிப்பிற்கும் இடைப்பட்ட காலத்தில், அதாவது சுபகிருது - மகரரவியில் (1903-தைமாதம்) ஒரு பதிப்பு வந்தது. பதிப்பாசிரியர் திருமயிலை செந்தில்வேலு முதலியார். ''திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மூர்த்திகள் ஆஞ்ஞையின்படி'' இப்பதிப்பு வெளியாயிற்று என்று நூல் முகப்பு கூறுகிறது. முகப்புப் பக்கத்தின் பின்புறத்தில் ''இஃது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் பிரதிக்கிணங்கப் பதிப்பிக்கப்பட்டது'' என்று அச்சாகி இருக்கிறது.

இக்குறிப்பு மிக மிக முக்கியமானது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆணையின்படி வெளிவந்த இப்பதிப்பு, நாவலர் பெருமானுக்கு ஸ்ரீலஸ்ரீ (ஸ்ரீலக்ஷ்ஸ்ரீ) என்ற ஒரு தனி அடை தந்துள்ளது. வசிட்டர் வாயால் ப்ரம்மரிஷிப் பட்டம் பெற்றவர் நம் நாவலர் பெருமான்.

நாம் அறிந்த வகையில் இதுவரை எட்டு பதிப்புக்களே நாவலர் பெருமான் திருப்பெயர் தாங்கி வெளிவந்துள்ளன.

இவ்வரலாற்றை அமரர் ரோஜா முத்தையா அவர்கள் எமக்கு உதவிய நூல்களின் ஆதாரத்தில் நாம் எழுத முடிந்தது.

தஞ்சாவூர் 05-06-1993 சேக்கிழார் அடிப்பொடி தி.ந. இராமச்சந்திரன்

(முதற்பதிப்பு முகப்பு)

உ
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம்
என்று வழங்குகிற

திருத்தொண்டர் புராணம்

சேக்கிழார் நாயனார்
அருளிச் செய்தது

இஃது
யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுக நாவலரவர்களால்

காரைக்காலம்மையார் புராணம் வரையில் பரிசோதித்து,
ஒவ்வொரு புராணத்துக்கும் இறுதியில்
அவர்களால் எழுதப்பட்ட சூசனத்தோடு
மேற்படியூர்

சதாசிவப் பிள்ளையால்
சென்ன பட்டணம்:
வித்தியாநுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.
இதன் விலை
ரூபா. 2
(Copyright Reserved)
1884

சிவமயம்

பதிப்புரை

சைவ மக்கள் பெரும் பயனடைய பெரியபுராண சூசனத்துடன் கூடிய நூலை மறு பதிப்புச் செய்வதற்கு சைவ சித்தாந்த நிலைய அறக்கட்டளை கடந்த ஈராண்டுகளாக எடுத்துக் கொண்ட முயற்சிகள் எண்ணிலடங்கா. இதற்காக அரும்பாடுபட்டோர் பலராவர்.

1. பண்டிதர் மு. கந்தையா, பி.ஏ. அவர்கள்:

முதலில் குறிப்பிடத்தக்கவர் யாழ்ப்பாணம், ஏழாலையைச் சேர்ந்த பெருமதிப்பிற்குரிய பண்டிதர் மு. கந்தையா, பி.ஏ. (ஹானஸ்) அவர்கள் ஆவார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான் அவர்கள் எழுதிய சூசனங்கள் முதல் 23 மட்டுமேயாகும். எஞ்சிய 40 சூசனங்களையும் எழுதித் தருமாறு பண்டிதர் அவர்களைக் கேட்டுக்கொண்ட பொழுது இப்பெரும் பணியை மனமுவந்து ஏற்றுக்கொண்டு சிறப்பாக எழுதியளித்ததுடன் சூசனங்களில் வரும் அருஞ்சொற்களுக்கு பொருள் எழுதி உதவியும் பெரிய புராண நூல் சூசனங்களுடன் அச்சேற்றப்பட்டது முதல், சென்னையிலிருந்து பெறும் அத்தனை அச்சுப் பிரதிகளையும் மெய்ப்புப் பார்த்து (புரூஃப் ரீடிங்) காலம் தாழ்த்தாது அனுப்பி வைத்து உதவியவரும் பண்டிதர் அவர்களே, இலங்கையில் நடைபெறும் பற்பல கலவரங்களுக்கிடையிலும் தபால் மூலமோ, தொலைபேசி வழியோ எம்மிடம் தொடர்பு கொண்டு அன்னார் ஆற்றிய தொண்டு விவரிக்கத் தக்கதன்று.

2. பெரிய புராணமும் அதன் சூசனங்களின் நூல் அச்சுப்பணி:

மலேசிய சைவ சித்தாந்த அறக்கட்டளை நிலைய தர்மகர்த்தாக்கள் பெரிய புராண சூசன நூலை மறுபதிப்புச் செய்யப் பெரிதும் விழைந்து சென்னையிலுள்ள காந்தளகம் அச்சக உரிமையாளர் மறவன்புலவு திரு. க. சச்சிதானந்தன் அவர்களுடன் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது உடனடியாக அன்னார் ஆர்வத்துடன் இப்பெரும் பணியைச் சிவத் தொண்டாகவே கருதி, அச்சிட்டுத் தருவதற்கு ஒப்புக் கொண்டதுடன் கடந்த ஈராண்டுகளும் இலங்கையிலுள்ள பயங்கரப் பூசல்களுக்கிடையிலும் அவற்றைப் பொருட்படுத்தாதும் காலந்தாழ்த்தாமலும், எடுத்துக்கொண்ட கருமத்தைத் தொடர்ந்து முடித்த சிறப்பு சொல்லுதற்கரிது. பண்டிதர் மு. கந்தையா அவர்களுடனும், எங்களுடனும் தொலைபேசி வழியும், தபால் மூலமும் தொடர்பு கொண்டு கருத்துக்களைப் பரிமாறி, அச்சுப் பணியை மிகச் சீரிய முறையில் சமயக் குரவர்கள், நாயன்மார்களின் வண்ணப் படங்களைச் சேகரித்து இணைத்து நிறைவேற்றுகையில், மெய்ப்புப் பார்க்க அவ்வப்போது பண்டிதர் மு. கந்தையா (ஈழம்) அவர்களுக்கு அனுப்பிப் பெற்றும் தம் சிவப்பணியைத் திறம்படப் பூர்த்தி செய்தமை பாராட்டுக்குரியது.

இலங்கைக்கு நாமனுப்பும் கடிதங்களும், சென்னையில் இருந்து திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் அனுப்பும் கடிதங்களும், ஈழத்தில் நடைபெறும் கலவரத்தால் பண்டிதர் மு. கந்தையா அவர்கள் கையில் கிட்டப் பெறவும், அதேபோல் பண்டிதர் அனுப்பும் கடிதங்களை, திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் பெறுவதற்கும் அறக்கட்டளை காவலாளர்கள் பெறுவதற்கும், இன்னும் மெய்ப்புப் பிரதிகளைத் தவறாமல் சென்னையிலிருந்து பெற்றுப் பண்டிதரிடம் ஒப்படைத்து, அன்னார் சரிபார்த்த பின் சென்னைக்குத் தவறாமல் அனுப்பி வைப்பதில் ஒரு நடுவராக இருந்து செயற்பட்டு உதவிய திரு. பேரின்பநாதன் அவர்களின் அரும்பணி பெரிதும் பாராட்டத்தக்கது.

அறக்கட்டளை தர்மகர்த்தாக்கள் டாக்டர் பரராஜசிங்கம், டாக்டர் இரத்தின சபாபதி, சைவ பூஷணம் சைவசித்தாந்தப் புரவலர், கலாநிதி இ.வே. கந்தையா (துணைத்தலைவர்) அவர்களுக்கும், மற்றும் இப்பணிக்கு எல்லாவகையானும் உதவிய திரு. ஆ. ஆறுமுகம் (கௌ. செயலாளர்), திரு.ஐ.குலவீரசிங்கம் (பொருளாளர்), டாக்டர் தேவபூபதி நடராஜா (மலேசிய பல்கலைக்கழகம்), சித்தாந்த ஆர்வலர் திருமதி பாமகள் பாலசிங்கம் ஆகியோருக்கும் மனமுவந்த நன்றியை அறக்கட்டளை சார்பில் தெரிவித்துக் கொள்கின்றேன். மேற்கண்ட அனைவருக்கும் அறக்கட்டளை என்றென்றும் நன்றிக்கடனுடையதாய் விளங்கும்.

க. குமாரசிவம், தலைவர், சைவ சித்தாந்த நிலைய அறக்கட்டளை, மலேசியா

உ

சிவமயம்

சைவ சித்தாந்த நிலையம் — அறக்கட்டளையும் விதிகளும்

விதி 1: காப்பாளர்கள்:

இந்தக் காப்புக்குழு பத்திரமானது, பொறியியலாளர் க. குமாரசிவம், பி.இ., எம். என்ஜி.ஸயன்ஸ்., பி.என்ஜி., ஃஎப்.ஐ.இ.எம்., எம்.ஐ.இ. (ஆஸ்திரேலியா), எம்.ஐ.இ.எஸ்., எம்.ஏ.ஸி.இ.எம்., அ. கார்டு எண் *3591342*, முகவரி எண் *1*, ஜாலான் எஸ்எஸ் *15/5*ஏ, சுபாங் ஜெயா, *47500* பெட்டாலிங் ஜெயா, என்பவருக்கிடையில் இந்த *24*ஆம் நாள், ஜனவரி *1992* அன்று செய்து கொள்ளப்பட்டு, இனி இதன் கீழ்வருவனவற்றில் கொடையாளராகக் குறிப்பிடப்படும் இவர் ஒரு தரப்பினராகவும் மற்றும்

அ) சைவ சித்தாந்தப் புரவலர், சைவ சித்தாந்தக் கலாநிதி, சைவ பூஷணம் ஆர். வி. கந்தையா, அ. கார்டு எண் *7628601*, முகவரி எண் *16*, லோரோங் காஸா டாலாம், மேடான் டமான்சாரா, *50490* கோலாலம்பூர்,

ஆ) டாக்டர் எஸ்.பரராஜசிங்கம், அ.கார்டு எண் *4069851*, முகவரி எண் *365*, ஜாலான் ஈப்போ, *51100* கோலாலம்பூர்,

இ) டாக்டர் ஏ.ரத்தினசபாபதி, ஜி.வி.ஸயன்ஸ். (டோரண்டோ),, டிப்.பெக்டீரியா (டோரண்டோ), அ.கார்டு எண் *7878979*, முகவரி எண் *25*, ஜாலான் ஸெத்தியா காஸே தூஜோ, *50490* கோலாலம்பூர்,

ஈ) பொறியியலாளர் க. குமாரசிவம், அ.கார்டு எண் *3591342*, முகவரி எண் *1*, ஜாலான் எஸ்எஸ் *15/5*ஏ, சுபாங் ஜெயா, *47500* கோலாலம்பூர்,

எ) திரு. ஏ. ஆறுமுகம், அ.கார்டு எண் *7878979*, முகவரி எண் *8*, ஜாலான் எஸ்எஸ் *1/9*, கம்போங் துங்கு, *47300* பெட்டாலிங் ஜெயா,

ஏ) திரு. ஐ.குலவீரசிங்கம், அ.கார்டு எண் *3304902*, முகவரி எண் *9*, லெங்கோங்கான் வேதவானம், *51100* கோலாலம்பூர்.

ஆகியோர் மற்றொரு தரப்பினராகவும், இனி இதன்கீழ் வருவனவற்றில் எல்லோரும் ஒன்று சேரக் கூட்டாக அமைப்புக் காப்பாளர்கள் எனக் குறிப்பிடப்படுவார்கள். இந்த அமைப்புக் காப்பாளர்கள், கூடுதலாகக் காப்பாளர்களை, மொத்த எண்ணிக்கை 9 பேர்களுக்கு மேற்போகாமல், நியமனம் செய்யலாம்.

விதி 2:

அவ்வகையில் ''சைவ சித்தாந்த நிலையம்'' என விளங்கும் ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டு, மேற் கூறப்பட்ட நிதி காப்புநிதியாக வைக்கப்பட்டு, காப்புக்குழுவின் நிபந்தனைகளுக் கேற்ப நிர்வகிக்கப் பட்டு உபயோகப்படுத்தப்படும்.

விதி 3: இந்தக் காப்புக்குழுவின் நோக்கங்களாவன:

3.1 அச்சில் இல்லாமற்போன சைவ சமயப் புத்தகங்களை மறு அச்சிடுவதற்குக் காப்பாளர்கள் ஒரு கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக் கொண்டால் மறு அச்சிடுதல்.

3.2 சைவ சித்தாந்தத் தத்துவங்கள், வழிபாடுகள் மற்றும் செய்முறைகள் சம்பந்தப்பட்ட தமிழ், ஆங்கிலம் மற்றும் இதர மொழிகளில், மற்றும் சம்பந்தப்பட்ட இலக்கியங்களில் உள்ள புத்தகங் கள் அடங்கிய ஒரு நூலகம் அமைத்தல்.

3.3 சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து, மாணவர்களின் பயிற்சியைக் கூட்டாக ஏற்பாடு செய்து நடத்துவதுடன், கருத்தரங்குகளையும் ஏற்பாடு செய்து சைவ சித்தாந்தத் தகவல்களையும் அறிவையும் பரப்புதல்.

3.4 நன்கு அறிமுகமான, சைவ சித்தாந்தத்தில் தேர்ந்தவர்களை அழைத்து, வகுப்புக்களை நடத்துவதுடன் பொது அரங்கில் உரையாற்றவும் செய்தல்.

3.5 தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களைப் படிப்பதற்காக வெளிநாட்டிற்கு அனுப்பி, முறையாகப் பயிற்சி பெறச் செய்து மையத்திற்குச் சேவை செய்ய வைப்பதுடன், அவர்களைக் கொண்டு சைவ சித்தாந்த சமயக்கல்வி, வழிபாடு மற்றும் செய்முறைகளையும் பரப்புதல்.

3.6 சைவ சித்தாந்தத் துறையில் அறிவுமிக்க பணியாளர்களை நியமனம் செய்வதை மேற்கொள்ளுதல்.

3.7 சைவர்களின் வாழ்க்கை முறையை ஊக்குவிக்கும் எந்தவிதச் செயற்பாடுகளையும் மேற்கொள்வதுடன் சைவ சித்தாந்தத் தத்துவக் கல்வியறிவினையும் வளர்த்தல்.

விதி 4: காப்பாளர்களின் கூட்டங்களும் பணிகளும்:

4.1 காப்பாளர்களின் முதலாவது கூட்டம், எண் 16, லோரோங் காஸா டாலம் மேடான் டமான்சாரா, 50490 கோலாலம்பூர் என்ற முகவரியில் நடத்தப் படுவதுடன், அதன்பின் அடுத்த ஒவ்வொரு கூட்டமும் அதே இடத்திலேயே நடத்தப்படும்.

4.2 குறைந்தது நான்கு காப்பாளர்கள் கூட்ட நிறைவு எண் (கோரம்) ஆக அமைவார்கள்.

4.3 காப்பாளர்கள் தங்களது முதலாவது கூட்டத்தில் நியமனம் செய்ய வேண்டியது.

அ) ஒரு தலைவர்

ஆ) ஒரு துணைத் தலைவர்

இ) ஒரு கௌரவ நிர்வாகச் செயலாளர், இவர் கூட்டங்களின் குறிப்புக்களை வைத்திருப்பதோடு, காப்புக்குழு சம்பந்தப்பட்ட எல்லாக் கடிதத் தொடர்புகளையும் காப்பாளர்களின் ஆணைக்கேற்ப மேற்கொள்வார்.

ஈ) ஒரு கௌரவ பொருளாளர். இவர் காப்புக்குழுவின் கணக்குக் குறிப்புக்களைக் காப்பாளர்களின் ஆணைக்கேற்ப வைத்திருப்பார்.

உ) காப்பு நிதிகள் எப்படி வைத்திருக்கப்பட வேண்டும் என்பதோடு எவ்விதம் நிர்வகிக்கப்பட வேண்டும் என்றும் தீர்மானித்தல்.

ஊ) இரண்டு கௌரவ கணக்காய்வாளர்கள். இவர்கள் ஒவ்வொரு ஆண்டுக் கணக்கையும் தணிக்கை செய்வார்கள்.

விதி 5: கணக்குகள்:

5.1 எல்லாப் பணங்களும், காப்பாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு வங்கியிலும், ஒரு நடப்புக் கணக்கிலோ அல்லது சேமிப்புக் கணக்கிலோ வைத்திருக்கப்படுவதுடன், நிலையான இருப்பாகவோ அல்லது வேறு எந்த வகையான முதலீடுகளாகவோ, காப்பாளாகளின் முடிவிற்கேற்ப வைக்கப்படலாம்.

5.2 எந்தச் செலவினமும், காப்பாளர்களால் ஒரு கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

5.3 1ஆம் நாள் ஜனவரி முதல் 31ஆம் நாள் டிசம்பர் வரையிலான ஒவ்வொரு ஆண்டும் கணக்காண்டாக இருக்கும். தணிக்கை செய்யப்பட்ட கணக்குகள் ஒவ்வொரு ஆண்டிலும், ஜூன் மாதம் காப்பாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

விதி 6: நன்கொடைகள்:

6.1 காப்பு நிதிக்கு நன்கொடைகள் தனி நபரால் அல்லது அமைப்புக்களால் தன்னிச்சையாக அளிக்கப்படலாம்.

6.2 பெறப்படும் நன்கொடைகள் ஒவ்வொன்றுக்கும் அச்சிடப்பட்ட பற்றுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட வேண்டும்.

விதி 7: காலியிடங்கள்:

எந்தக் காலியிடமும், மீதமுள்ள காப்பாளர்களால், காப்பாளர்களின் கூட்டத்தன்று நிரப்பப்பட வேண்டும்.

விதி 8: பொது:

இவற்றில் இல்லாத எந்த விஷயமும் காப்பாளர்களின் கூட்டத்தில் முடிவு செய்யப்படுவதோடு, அவர்களின் முடிவே இறுதியானதாகவும் இருக்கும்.

சாட்சியாக, மேற்குறிப்பிட்டுள்ளவை பற்றி இருதரப்பினரும் இதன்கீழ் தங்களது ஒப்பங்களை மேலே குறிப்பிடப்பட்ட நாளன்று கோலாலம்பூரில் இட்டுள்ளார்கள்.

முறையாக நிறைவேற்றியவர் கூறப்பட்டுள்ள க. குமாரசிவம்:........... முன்னிலை வகித்தவர்:

....

(எஸ். நடராசா)

முறையாக நிறைவேற்றியவர்கள் கூறப்பட்டுள்ள:

ஆர்.வி. கந்தையா ....

டாக்டர் எஸ். பரராஜசிங்கம் ....

பொறியியலாளர் க. குமாரசிவம் ....

அ. ஆறுமுகம் ....

ஐ. குலவீரசிங்கம் ....

டாக்டர் ஏ. ரத்தினசபாபதி ....

முன்னிலை வகித்தவர்:

....

(எஸ். நடராசா)

Sivamayam

NAVALAR'S THESIS ON THIRUTHONDAR PURANAM

R.N. Sivaprakasam, Editor, Hindu Organ, Jaffna.

The development of the mental capacity of Sri la Sri Arumuganavalar had been so significant that he was led to study and understand the greatest epic in Tamil, Thiruthondar Puranam. Attracted by this epic, Navalar became induced to render the soul-stirring verses of Saint Sekkilar, the author of this work in Tamil prose. In the prolonged course of this pleasant endeavour Navalar was equipping himself with a sound knowledge of Saiva Sidthantha that helped him clear his doubts and grasp the basic truths of the Saiva Philosophy. Having completed the stupendous work-the prose version of Thiruthondar Puranam-Navalar found that it was absolutely necessary for a thesis to be written on that subject expounding the true significance of Saivism.

Navalar was thus discovering a path way to approach Saivism; he was able to survey the gamut of Saivism in Thiruthondar Puranam. In his deep concern for the Saiva brethren, Navalar thought that Thiruthondar Puranam being the only epic that had in it all the requirements of a Saiva Classic, should be expounded in the form of a thesis. In Navalar's conception the so called epics in Tamil numbering five had failed exhaustively to deal with the end of liberation. Thiruthondar Puranam as the ideal epic was instructive enough to enable a man of religion, a student to discover the path way to liberation.

This great classic instead of adopting the usual poetical way of giving a graphic description of the scenic spleandour of the land, mountains, rivers and vegetation, dealt with the spiritual nature of the Saints and conception of the Supreme.

Saiva Bhooshanam R.V. Kandiah, his son Ir. K. Kumarasivam and the Center for Saiva Sidthantham, guided by them have earned for themselves the encomium of all Hindu Saivites by undertaking to publish this incomparable and stupendous religious work in a spirit of sincere service in the cause of religion.

Navalar, in choosing the charming word *'Soosanam'* must have intended to caption this inimitable thesis in such succint manner that would convey the idea of a minute expounding in a microscopical way, the true perspective of Thiruthondar Puranam clearing all misconceptions and picturing the intended purpose of Saint Sekkilar.

To study Saiva Sidthantha *Thirumuraikal*-these epic garlands of verses should be studied. For that purpose the Thiruthondar Puranam should be studied-and for that purpose Navalar's thesis should be studied.

To give a student of Saiva Sidthantha the easiest and the most instructive understanding Pundit Kandiah's exposition like Navalar's *Soosanam* serves as a sure guide.